மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரைவிலே அதுபற்றி மின் வாரியம் முடிவெடுக்கும்.

திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டாக பிரிக்க இருக்கும் அந்தத் திட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், ஏற்கனவே தென் ஆற்காடு மாவட்டம் இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களாக இயங்குகின்றது. அந்த அடிப்படையில் மின் வாரியம் பரிசீலிக்கும்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு விவசாய பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பில் முன் உரிமை வழங்கல்.

*வினா எண் 709—திருமதி தா. இராசம்மாள் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் ஆதிதிராவிடர்களுக்கும் மலைவாசிகளுக்கும் முன் னுரிமை வழங்க அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தாலும் அவர்களுக்கும் இந்த சலுகை விரிவு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் (*Tribal People*) பம்பு செட்டுகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது,

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தால் அவர்களுக்கு தனியான முன் னுரிமை அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் இணைப்பு கொடுப்பதில் ஆதிவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மாதிரி 2, 3 ஏக்கர்கள் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது ஆதிவாசிகளுக்கு மட்டும்தான். அதாவது மலைவாழ் ஆதி வாசிகளுக்கு மட்டும் தான். ஆதிதிராவிடர்களுக்கு அல்ல ; சிறு விவசாயிகளுக்கெல்லாம் கொடுக்கின்ற அத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் மின் இணைப்புப் பெறுவதற்காக சில பேர்கள் முதலில் மலைவாழ் ஆதிவாசிகள் பேரிலே நிலத்தை எழுதி வைத்து, மின் இணைப்பு கிடைத்த பிறகு அந்த நிலத்தை தங்கள் பெயரில் திருப்பி எழுதிக்கொள்வதாகச் சொல்லப் படுகிறதே, அதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக் கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் தகவல் ஏதுமில்லை. ஆனால், அப்படியும் ஏமாற்றக் கூடியவர்கள் நம் சமுதாயத்திலே இருக்கிறார்கள்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் என்பது மலைப் பிரதேசத்திலே வாழ்கின்ற மக்க ளுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை கொடுப்பதாக கூறப்படு கிறது. மலைவாழ் ஆதிவாசிகளிலே 39 பிரிவுகள் இருக்கின்ற காரணத்தினால், கீழே, தரையிலே குடியிருப்பவர்களுக்கும் அந்த மின்இணைப்பு முன்னுரிமையைக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஹில் ஏரியா டெவலப்மென்ட், மலையிலே இருக்கின்றவர்களுக்கு செய்யக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் வருகிறது. அந்த ஆதிவாசிகளுக்கு மட்டும் நாம் முன்னுரிமை தருகிறோம். அதை மற்றபடி கீழ்ப்பகுதியிலே இருக்கின்றவர் களுக்கு, சம நிலத்திலே இருக்கின்றவர்களுக்கு தரவேண்டுமென்ற அடிப்படை வந்தால், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் சொன்னது தான் நடக்கும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் இல்லாத பகுதிகளில் முன்னாள் ராணு வத்தினர் குடும்பத்தினருக்கு இந்த முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஆதிவாசிகளைப் பற்றியது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு மின் இணைப்புக்கொடுப்பதில் முன்னுரிமை தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மா திரி வழங்கப்பட்டதில், மின் இணைப்பு கேட்டு எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ? அதில் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருச்சி மலைக்கோட்டைக்கு '' இழுவை இரயில் '' அமைக்கும் திட்டம்.

*வினா எண் 710—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மலைக்கோட்டைக்கு விஞ்ச் (Winch) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோட்டையில் இருக்கிற உச்சி பிள்ளையார் கோவிலுக்கு அதிகமான அளவில் பக்தர்கள் தினசரி செல்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது பழனியில் இருப்பதைப் போன்று இழுவை இரயில் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு இழுவை இரயில் அமைப்பதை முன்பே பரிசீலிக்கப்பட்டு 9.60 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கு தொழில் நுட்ப ரீதியில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லப்பட்டது. உச்சி பிள்ளையார் இருக்கிற குன்று பகுதி அதிக உயரமில்லாத காரணத்தால் நடந்து சென்று வருவது நல்லது என்று பக்தர்கள் அபிப்பிராயப்பட்டதால் அது கைவிடப்பட்டது.

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள '' இரட்டைத் திருமாளிகை''.

*வினா எண். 711—திரு. க. பாரமலை : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் நகரிலுள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவிலில் '' இரட்டை திருமாளிகை '' எனப்படும் பகுதி முள் புதர்கள் வளர்ந்து பக்தர்கள் போக முடியாத அளவிற்கு